**செய்தி வெளியீடு எண்: 55 நாள்: 20–1–2012.**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.இரா. காமராஜ் அவர்கள் தலைமையில் 20.1.2012 அன்று சென்னை 5 , சேப்பாக்கம் , எழிலகம் கட்டிடத்தில் 4வது தளத்தில் உள்ள உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் சென்னை நகர உதவி ஆணையாளர்கள் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

ஆய்வுக் கூட்டத்தில் அரசு செயலாளர், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை திருமதி.M.P.நிர்மலா, இ.ஆ.ப., அவர்கள் , உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு. P.M. பஷீர் அஹமது, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள் , சென்னை நகர துணை ஆணையாளர் (ந) வடக்கு/ தெற்கு மற்றும் உதவி ஆணையாளர்கள் கலந்து கொண்டனர்.

ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவுரைகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏழை எளிய மக்களின் மீது கொண்டுள்ள அளவற்ற அன்பின் காரணமாக பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியினை 1.6.2011 முதல் விலையின்றி வழங்க உத்திரவிட்டார்கள்.

இந்திய துணை கண்டத்திலேயே தமிழகத்தில் தான் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி அனைத்து அரிசி விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கும் விலையேதுமின்றி வழங்கப்படுகிறது.

இதன் காரணமாக இம்மாநிலத்தில் அனைத்து மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பு முற்றிலுமாக உறுதி செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொது விநியோகத் திட்ட பலன்கள் ஏழை எளிய மக்களை முழுமையாக சென்றடைய வேண்டும் என்பதில் உறுதியுடன் உள்ளார்கள்.

தற்போது புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளின் காலத்தை மேலும் ஓராண்டிற்கு (1.1.2012 முதல் 31.12.2012 வரை ) புதுப்பிக்கும் பணி 1.1.2012 முதல் துவங்கி நடைபெற்று வருகிறது. குடும்ப அட்டைகள் புதுப்பிக்கும் போது வாய்மொழியாக சேகரிக்கப்படும் விபரங்கள் குடும்ப அட்டைதாரர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. மேலும் இப்பணியை பொது மக்களுக்கு எவ்வித சிரமமும் இல்லாத வகையில் மேற்கொள்ள வேண்டும் எனவும் குடும்ப அட்டைகள் புதுப்பித்தவுடன் அவற்றிற்கு பொருள்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் அலுவலர்கள் / பணியாளர்கள்

கேட்டுக் கொள்ளப்பட்டு பொது மக்கள் ஒத்துழைப்புடன் இது வரை 1,22,59,174 குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

நியாயவிலை அங்காடிகள் பணி நாட்களில் உரிய நேரத்தில் திறக்கப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட வேண்டும்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தரமான பொருள்கள் சரியான எடையில் தகுதியும் தேவையுமுடைய குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

தரமற்ற பொருள்கள் ஏதுமிருப்பின் அவை கிடங்குகளுக்கு உடன் திருப்பி அனுப்பப்பட்டு தரமான பொருள்களை மட்டுமே நியாயவிலை அங்காடிகளில் வழங்கப்பட வேண்டும்.

கிடங்குகளில் போதிய அளவு அத்தியாவசியப் பொருள்கள் இருப்பு வைக்கப்பட்டு நியாயவிலை அங்காடிகளுக்கு அட்டவணைப்படி உரிய தேதியில் நகர்வு செய்யப்பட வேண்டும்.

மேலும் மாதத்தின் முதல் தேதி முதல் அங்காடிகளில் அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் இருப்பு வைக்கப்பட்டு அட்டைதாரர்கள் அங்காடிகளுக்கு வரும் போது அத்தியாவசியப் பொருள்களை பெற்றுச் செல்லும் வகையில் இருப்பு வைக்கப்பட வேண்டும்.

அலுவலர்கள் மற்றும் அங்காடிப் பணியாளர்கள் பொது மக்களிடம் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும். பொது மக்கள் கேட்கும் விபரங்களுக்கு பொறுப்புடனும், கனிவுடனும் உரிய தகவல்களை அளிக்க வேண்டும்.

அத்தியாவசியப் பொருள்களுக்கான ஒதுக்கீடு ஆணைகள் உரிய தேதியில் பிறப்பிக்கப்பட வேண்டும்.

அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம்பருப்பு, உளுத்தம் பருப்பு, மண்ணெண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் எடை குறைவின்றி தகுதியும் தேவையுமுடைய பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். மண்ணெண்ணெய் பெற மாத இறுதியில் நியாயவிலை கடைகளுக்கு வரும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்கிடும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருள்கள் கடத்துவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின் கீழான விசாரணைகள் விரைந்து முடிக்கப்பட்டு கைப்பற்றப்படும் அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் வாகனங்கள் விரைந்து தீர்வு செய்யப்பட வேண்டும்.

அத்தியாவசியப் பொருள்கள் பதுக்கல், கடத்தலில் ஈடுபடுவோர் கைது செய்யப்பட்டு குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். தொடர் பதுக்கல், கடத்தலில் ஈடுபடுவோர் தடுப்புக் காவலில் வைக்கப்பட வேண்டும்.

எரிவாயு ஏற்றிச் செல்லும் லாரி உரிமையாளர்கள் 19.1.2012 / 20.1.2012 நள்ளிரவு முதல் வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொண்டு விட்டதால் எரிவாயு உருளைகள் பொது மக்களுக்கு சீராக விநியோகம் செய்யப்படுவதை கண்காணித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**